அ.வ.எண்.111/2014 – 14.11.2019 – வா.சா.1 பரமேஸ்வரன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் 8ம் வகுப்பு படித்திருக்கிறேன். நான் கார் புரோக்கர் வேலை செய்கிறேன். முதலில் 2005 வரை ரேடியோ கடை 10 ஆண்டுகளாக வைத்திருந்தேன். பின்னிட்டு இந்த தொழில் செய்து வருகிறேன். தனம் எலக்ட்ரானிக்ஸ் என்ற பெயரில் கோபிசெட்டிபாளையத்தில் ரேடியோ கடை வைத்திருந்தேன். ரேடியோ கடையில் ரேடியோக்களை சர்வீஸ் செய்தும், அசம்பளிங் செய்தும் தொழில் செய்து வந்தேன். அதற்கு கணக்கு வழக்குகள் பராமரித்து வரவில்லை. வியாபாரம் குறைந்துவிட்டதால் அந்த தொழிலை நிறுத்தி விட்டேன். அந்த கடை பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்ல. அந்த கடையை நடத்தி வந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. கார் வாங்கி விற்பனை செய்து வருவதற்கு குறிப்பிட்ட முகவரி உள்ளதா என்றால் இல்லை. கமிஷன் வியாபாரம் மட்டும செய்கிறேன், அதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. தொழில் செய்து வருவதற்குரிய கணக்கு வழக்குகள் தாக்கல் செய்யவில்லை. இது தவிர நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேன், சொந்தமாக செய்கிறீர்களா என்றால் இல்லை, முகவராக இருந்து செய்கிறேன். எந்த பைனான்சிற்கு நீங்கள் முகவராக இருந்து பைனான்ஸ் தொழில் செய்கிறீர்கள் என்றால் சுகம் பைனான்ஸ் நிறுவனத்திற்கு முகவராக இருந்து வருகிறேன். சுகம் பைனான்சில் முகவராக வேலை செய்தீர்களா என்றால் இல்லை, சாட்சி தற்போது சுகம் பைனான்சிற்கு நான் முகவராக இருக்கவில்லை என்ற தெரிவித்தார். உங்களுக்கும் சுகம் பைனான்சிற்கும் என்ன உறவு என்று சொன்னால் நான் கார் வாங்கிக் கொடுக்கும் நபருக்கு பைனான்ஸ் தேவைப்படும்போது எந்த பைனான்ஸ் கம்பனி பணம் கொடுத்தாலும் அவர்களிடம் கமிசனுக்கு பணம் கடன் வாங்கி கார் விற்பனை செய்வேன். கமிஷன் யாரிடம் வாங்குவீர்கள் என்றால் பைனான்சிலும் வாங்குவேன், கார் வாங்குபவரிடமும் வாங்குவேன். நீங்கள் கூறும் விவரங்களுக்கு உங்களிடம் கணக்கு வழக்குகள் இல்லை என்றால் சரி. எனக்கு சொந்த வீடு இருக்கிறது. 4,5 வீடுகள் வாடகைக்கு விட்டிருக்கிறேன். எனக்கு மாத வருமானமாக வாடகை வருமானத்தையும் சேர்த்து ரூ.20000/– முதல் ரூ.25000/– வரை கிடைக்கும். நான் வருமான வரி செலுத்துவதில்லை. வருமானத்தை காட்டக்கூடிய எந்த ஆவணத்தையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பிரதிவாதிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் உங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல.

ஜி.கே.பழனிசாமி எனது சகோதரியின் கணவர். ஜி.டி.பாஸ்கரன் என் அண்ணன் மகன். அப்பாஸ் என்பவர் என்னை போன்று கார் வியாபாரம் செய்பவர். உங்களின் உதவியாளரா என்றால் இல்லை, தனியாக வியாபாரம் செய்பவர், எனக்கு நண்பர். அப்பாஸை எனக்கு 10 ஆண்டுகளாகத் தெரியும். அவர் கூகலூரைச் சேர்ந்தவர். அவர் ஏதாவது முகவரியில் தொழில் செய்கிறாரா என்றால் இல்லை. ஜி.டி.பாஸ்கரன் பைனான்ஸ் தொழில் கோபிசெட்டிபாளையத்தில் செய்கிறார். அவர் ஜி.கே.பழனிசாமியின் சித்தப்பாவின் பேரன். அவர் ஆரம்பத்தில் திருப்பூரில் தணிக்கையாளராக இருந்தார். சாட்சி கையொப்பமிட்ட அப்பாஸ் எனக்கு நண்பர், ஜி.டி.பாஸ்கரனும், ஜி.கே.பழனிசாமியும் உறவினர்கள். ஜி.கே.பழனிசாமி ஈரோட்டில் ராயல் தியேட்டர் எதிரில் விடுதி வைத்திருக்கிறார். அதை தவிர பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தார். அந்த பைனான்ஸ் தொழிலில் பிரதிவாதி ஜி.கே.பழனிசாமியிடம் அலுவலக மேலாளராக இருந்து வந்தாரா என்றால் சரி. அவர்செய்து வந்த தொழில் முழுவதையுமே பிரதிவாதி கவனித்து வந்தார். பிரதிவாதியை வைத்துதான் ஜி.கே.பழனிசாமி தாக்கல் செய்த வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வந்தாரா என்றால் தெரியாது. அவர் தாக்கல் செய்த வழக்குகளுக்கு கணபதியும் உடன் சாட்சியாக இருந்தாரா என்றால் தெரியாது. கணபதிக்கும், பழனிசாமிக்கும் இடையே மனவருத்தம் ஏற்பட்டு பிரதிவாதி பழனிசாமியை விட்டு விலகிவிட்டார், விலகி எவ்வளவு நாட்களாகிறது என்று தெரியாது. ஜி.கே.பழனிசாமி பெயரில் ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நடைபெற்றது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு ஜி.கே.பழனிசாமி, பாஸ்கரன், கணபதி ஆகியோர் பெயரில் அந்த வழக்கு நடந்தது என்றால் தெரியாது. அதில் பாஸ்கரனும், அவரது நண்பர்களும் வழக்கிலிருந்து விடுதலை பெற்றார்கள் என்பது எனக்கு தெரியாது. கடன் என்ன காரணத்திற்காக கொடுக்கப்பட்டது என்று வழக்கிலும், புரோநோட்டிலும் இடம் பெறவில்லை

என்றால் சரி. ரூ.4 லட்சம் கடன் கணபதி வாங்கவேண்டிய தேவையே ஏற்படவில்லை என்றால் சரியல்ல. ரூ.4 லட்சம் கடனை கொடுக்கும் அளவிற்கு உங்களுக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல, நான் யாரிடமாவது வாங்கி கூட கொடுத்திருக்கலாம். யாரிடமிருந்து பணம் வாங்கி கொடுத்தீர்கள் என்றால் அப்போது வாங்கினேன் ஞாபகம் இல்லை. ரூ.4 லட்சம் முழு தொகையும் உங்கள் வருமானத்தைக் கொண்டு பிரதிவாதிக்கு வழங்கப்படவில்லை என்றால் சரி, வெளியிலிருந்து வாங்கிக் கொடுத்தேன், எனக்கு வாடகை வருமானமும் வருகிறது. ரூ.4 லட்சம் தொகை யார் யாரிடமிருந்து எவ்வளவு தொகை வாங்கினீர்கள் என்று உங்களால் தற்போது கூறமுடியாது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. நான் பணம் வாங்கிய நபர்களிடம் திருப்பி செலுத்திவிட்டேன். எப்போது செலுத்தினீர்கள் என்றால் நான் வாங்கி 2,3 மாதத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டேன். பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் யார் யாரிடம் பணம் வாங்கி பிரதிவாதியிடம் பணம் கொடுத்தீர்கள், அதை அந்த நபர்களுக்கு எப்போது திருப்பி கொடுத்தீர்கள் என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.